செ.வெ.எண் : 03/ ஜூலை நாள் : 03.07.2017

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பாக நடைபெற்ற வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் குறித்த விழிப்புணர்வு பேரணியினை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகே இன்று (03.07.2017) மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பாக, மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் குறித்த விழிப்புணர்வு பேரணியினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் மூலம் வேலைவாய்ப்பற்ற இளைஞர்கள் பயன்பெறும் வகையில் வேலைவாய்ப்பு பயிற்சிகள், தொழில்நெறி வழிகாட்டுதல் குறித்த பயிற்சிகள், தனியார் வேலைவாய்ப்பு முகாம்கள் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை அலுவலகத்தில் அனைத்து விதமான அரசு பணியிடங்களுக்கான போட்டித் தேர்வுகள், வங்கி பணியிடங்களுக்கான தேர்வுகள் என பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு இளைஞர்களை தங்களை தயார் செய்து கொள்வதற்கான புத்தகங்கள் உள்ளன.

இத்தகைய வாய்ப்புகள் குறித்து இளைஞர்கள் தெரிந்து கொண்டு அதனை முழுமையாக பயன்படுத்தி கொள்ள விழிப்புணர்வு ஏற்படுத்திடும் வகையில் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் மூலம் ஆண்டுதோறும் ஜூலை மாதத்தின் முதல் வாரம் வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டுதல் விழிப்புணர்வு வாரமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் இன்றைய தினம் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலையம் அருகே மாணவ,மாணவியர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. இப்பேரணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்பேரணியில் இராமநாதபுரம் நகராட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, சுவார்ட்ஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையம் ஆகிய கல்வி நிலையங்களைச் சார்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் பங்கேற்றனர். இப்பேரணியில் கலந்து கொண்ட மாணவ, மாணவியர்கள் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் சார்பாக செயல்படுத்தப்பட்டு வரும் பல்வேறு இளைஞர்கள் நல பயிற்சி வகுப்புகள் மற்றும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகளை கையில் ஏந்தியவாறு பேரணியாக சென்று விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இப்பேரணியானது இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் துவங்கி இராமநாதபுரம் பழைய பேருந்து நிலையத்தில் முடிவு பெற்றது.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திரு.க.முனியசாமி, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலக உதவி இயக்குநர் திரு.மு.அபுபக்கர் சித்திக், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை உள்பட அரசு அலுவலர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**